**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 02ம் நாள்
**இ.ம.எண். 3/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 19/2023**

1. H. ஷேக் இஸ்மாயில்
2. ஆரிப் மரைக்காயர் ..மனுதாரர்கள்/ பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் பிரதிவாதி

//எதிர்//

முகம்மது பாரூக் ..எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என் முன்பாக இன்று (11.09.2025) இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று (18.09.2025) இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, மனுதாரருக்கு பிரதிவாதி வழங்கிய அதிகார ஆவணத்தை அனுசரித்து பிரதிவாதிக்காக மனுதாரர் இந்த பிராதை தாக்கல் செய்யவும் வழக்கை நடத்தவும் அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம் :**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவார். வாதி, பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் மேற்படி வழக்கை நேரில் இருந்து கவனிக்க இயலவில்லை என்பதால் அவருக்காக தான் அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதி இந்த வழக்கை மேல் நடத்த தனக்கு அதிகாரம் அளித்து 10-06-2025

அன்று ஒரு அதிகார ஆவணம் வழங்கி உள்ளதாகவும், மேற்படி ஆவணம் தரங்கம்பாடி சார்பதிவகத்தில் புக் நம்பர் 4–ல் 06/2025வது ஆவணமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி அதிகார ஆவணம் இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அது இன்னும் அமலில் உள்ளதாகவும், மேற்படி அதிகார ஆவணத்தை அனுசரித்து பிரதிவாதிக்காக தான் இந்த வழக்கை நடத்தவும், நீதிமன்றம் மூலமாகவோ, வாதியிடம் நேரிடையாகவோ பேசி வழக்கை தீர்க்கவும், ராஜினாமா செய்து கொள்ளவும், வழக்கை சமரசம் செய்து கொள்ளவும் தனக்கு அதிகாரம் உண்டு என்றும், அதன்படி பவர் ஏஜெண்ட் முறையில் இந்த வழக்கை தான் நடத்த தனக்கு அனுமதி அளிக்க வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும், இல்லாவிடில் பிரதிவாதிக்கு ஏராளமான கஷ்டமும் நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே, பிரதிவாதி தனக்கு வழங்கிய அதிகார ஆவணத்தை அனுசரித்து பிரதிவாதிக்காக தான் இந்த வழக்கை நடத்த தனக்க அனுமதி வழங்கும்படி உத்தரவு கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை குறிப்பாண</u> :

3. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்ததக்கது அல்ல. மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த பொது அதிகார மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனு உடன் தாக்கல் செய்துள்ள பொது அதிகார ஆவணத்தை சட்டப்படி பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றும், எனவே, இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

<u>தீர்வு</u>

5. மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் என்றும், பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாததால் அவருக்காக மனுதாரர் அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதி இந்த வழக்கை மேல் நடத்த மனுதாரருக்கு அதிகாரம்

அளித்து 10-06-2025 அன்று ஒரு அதிகார ஆவணம் வழங்கி உள்ளதாகவும், மேற்படி ஆவணம் தரங்கம்பாடி சார்பதிவகத்தில் புக் நம்பர் 4-ல் 06/2025வது ஆவணமாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி அதிகார ஆவணத்தை அனுசரித்து பிரதிவாதிக்காக மனுதாரர் இந்த வழக்கை நடத்தவும், நீதிமன்றம் மூலமாகவோ, வாதியிடம் நேரிடையாகவோ பேசி வழக்கை தீர்க்கவும், ராஜினாமா செய்து கொள்ளவும், வழக்கை சமரசம் செய்து கொள்ளவும் மனுதாரருக்கு அதிகாரம் உண்டு என்றும், அதன்படி பவர் ஏஜெண்ட் முறையில் இந்த வழக்கை மனுதாரர் நடத்த அனுமதி அளிக்க வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும், இல்லாவிடில் பிரதிவாதிக்கு ஏராளமான கஷ்டமும் நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே, மனுதாரருக்கு பிரதிவாதி வழங்கிய அதிகார ஆவணத்தை அனுசரித்து பிரதிவாதிக்காக மனுதாரர் இந்த பிராதை தாக்கல் செய்யவும் வழக்கை நடத்தவும் அனுமதி கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த பொது அதிகார மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர்கள் தரப்பில், பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாததால் அவருக்காக மனுதாரர் அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரருக்கு பிரதிவாதி வழங்கிய அதிகார ஆவணத்தை அனுசரித்து பிரதிவாதிக்காக மனுதாரர் இந்த பிராதை தாக்கல் செய்யவும் வழக்கை நடத்தவும் அனுமதி கோரியுள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த பொது அதிகார மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள பொது அதிகார பத்திரமானது பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், பொது அதிகார பத்திரமானது இந்த வழக்கை இந்த மனுவின் மனுதாரர் நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு

உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.எனவே, இம்மனுவை அனுமதிக்கலாம் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. முடிவாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு 18.09.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.09.18 16:22:11 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2025.09.18 16:22:17 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி**